செ.வெ.எண்.70 நாள்: 31.08.2021

# *திருப்பூர் மவாட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவமான தேசிய அடையாள அட்டை UDID (Unique Indenty Card for Persons With Disabilities) முகாம் நடைபெறவுள்ளது.*

## *மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், இ.ஆ.ப. அவர்கள் தகவல்!!!*

*திருப்பூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் அரசின் திட்டங்கள் பயன் பெற வேண்டி ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வைத்துள்ள அனைவருக்கும் **மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவமான தேசிய அடையாள அட்டை (UDID SMART CARD -Unique Indenty Card for Persons With Disabilities) கீழ் காணும் அட்டவணைப்படி முகாம்கள் நடைபெறவுள்ளது***

*02.09.2021 வியாழக்கிழமை காலை 10.00 முதல் 2.00 மணி வரை திருப்பூர் வடக்கு மற்றும் திருப்பூர் தெற்கு வட்டாச்சியர் அலுவலகத்திலும்,04.09.2021 சனிக்கிழமை காலை 10.00 முதல் 2.00 மணி வரை காங்கேயம் மற்றும் ஊத்துக்குளி வட்டாச்சியர் அலுவலகத்திலும், 06.09.2021 திங்கட்கிழமை காலை 10.00 முதல் 2.00வரை உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டாச்சியர் அலுவலகத்திலும் 07.09.2021 செவ்வாய்கிழமை காலை 10.00 முதல் 2.00 வரை அவினாசி மற்றும் பல்லடம் வட்டாச்சியர் அலுவலகத்திலும், 08.09.2021 புதன்கிழமை காலை 10.00 முதல் 2.00 வரை தாராபுரம் வட்டாச்சியர் அலுவலகத்திலும் முகாம்கள் நடைபெறவுள்ளது*

எனவே மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றுள்ள அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளும் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவமான தேசிய அடையாள அட்டை (UDID SMART CARD Unique Indenty Card for Persons With Disabilities) பெற அவசியமாகும்.

இந்த அடையாள அட்டையை ஆதாரமாக கொண்டு அரசின் நலத் திட்ட உதவிகள் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் இதுநாள் வரை மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றுள்ள அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளும் தனித்துவமான தேசிய அடையாள அட்டை UDID (Unique Indenty Card for Persons With Disabilities) இணையதளத்தில் பதிவு செய்ய ஏதுவாக **மாற்றுதிறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை – அசல் நகல், குடும்ப அட்டை- அசல் நகல், ஆதார் அடடை-அசல் நகல், புகைப்படம்- 2** ஆகியவற்றுடன் மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள அந்தந்த பகுதிக்குட்பட்ட வட்டாச்சியர் அலுவலகத்தில் தவறாமல் கலந்து கொண்டு விண்ணப்பித்து பயன் பெறுமாறு **திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்..வினீத், இ.ஆ.ப. அவர்கள்** கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**